**Erziehungsdirektion des Kantons Bern**

Amt für Kindergarten, Volksschule und Beratung

**Direction de l'instruction publique du canton de Berne**

Office de l’enseignement préscolaire et obligatoire, du conseil et de l’orientation

# பேர்ண் மாநிலத்தின் கட்டாய பாடசாலை

# பெற்றோருக்குத்தகவல்கள்

ஜெர்மன்மொழி பேசும் மாநிலப்பகுதி



**Elterninformation für den deutschsprachigen Kantonsteil**

**Tamilisch**

## கல்வித்திணைக்கள இயக்குனரின் முன்னுரை

அன்பான பெற்றோர்களே

கற்கும் ஆரம்ப வருடங்களான கட்டாய பாடசாலை வாழ்வின் முக்கியமான நிகழ்வுகளுக்குள் அடங்குகின்றன. இந்த வயதில் பிள்ளைகள் ஒரு அற்புதமான உலகில் நுழைவதுடன், வகுப்பில் சகமாணவர்களுடன் ஒன்றிணைந்து கொள்வது ஒரு அர்த்தமுள்ள பங்கை வகிக்கின்றது.

என்னைப் பொறுத்தவரை எப்பொழுதும் பிள்ளையின் நலன், தனது ஆசிரியர்களுடனான உறவு மற்றும் பாடசாலையுடனான பெற்றோரின் நம்பிக்கை என்பன முக்கியமான விடயங்கள். பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையே உறுதியான மற்றும் எதிர்காலத்தை நோக்கிய தோழமையே பிள்ளைகளின் மேலதிக கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும். இவ்வாறு ஒன்றிணைந்து செயற்படுவதே என்னுடைய இதயத்தில் அதிகம் உள்ளது.



*Bernhard Pulver*
கல்வித்திணைக்கள இயக்குனர்

பெற்றோரான உங்களால் மிகவும் அதிகமாக வெற்றியடைவதற்குப் பங்களிக்கவும், உங்கள் பிள்ளையின் தொடரும் பாடசாலை வாழ்வுப் பாதையைக் கவனிப்பதுடன், உதவிகள் வழங்கி வழிநடத்திச் செல்ல முடியும். இந்தப் பிரசுரத்தில் எமது பாடசாலை நடைமுறைகளை சரியான முறையில் நீங்கள் அறிந்து கொள்ள உங்களுக்கு உதவக்கூடிய முக்கியமான தகவல்களை நாம் வழங்குகின்றோம்.

இங்கு நீங்கள் ஏனைய விடயங்களுடன் பின்வரும் கேள்விகளுக்கும் விடை காணலாம்:

- எவ்வாறு கட்டாய பாடசாலை கட்டமைக்கப்பட்டுள்ளது?
- பெற்றோரிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது?
- எனது பிள்ளை கட்டாய பாடசாலையில் நலமாக இருப்பதற்கும் மற்றும் நன்றாகக் கற்பதற்கும் என்னால் என்ன செய்ய முடியும்?

ஆசிரியர்கள் மற்றும் உங்கள் பிள்ளையின் பாடசாலை அதிபர் ஆகியோர் மேலதிக தகவல்களை வழங்குவதற்குத் தயாராக உள்ளனர். தயவுசெய்து எமது இணையத் தளமான www.erz.be.ch உடன் உங்கள் கிராம மற்றும் உங்கள் பிள்ளையின் பாடசாலை இணையத்தளத்தைப் பார்க்கவும்.

உங்கள் பிள்ளைக்கும் மற்றும் பெற்றோராகிய உங்களுக்கும் ஒரு நல்ல கட்டாய பாடசாலைக் காலமாக அமைய நாங்கள் வாழ்த்துகின்றோம்.

Bernhard Pulver
**பேர்ண் மாநில கல்வித்திணைக்கள இயக்குனர்**

## உள்ளடக்கப் பட்டியல்

**1 முக்கியமானவை சுருக்கமாக .......... 3**
பொதுவானது .......... 3
பாடசாலை வருடம் மற்றும் பாடசாலை விடுமுறை .......... 3
நேர அட்டவணை .......... 3
நாள் பாடசாலை .......... 4
வீட்டுப்பாடங்கள் .......... 4
மதிப்பீடு .......... 4
வராமலிருத்தல் மற்றும் விடுமுறை பெறுதல் .......... 4
மேலதிகமாகக் கற்கும் மற்றும் ஓய்வுநேர வசதிகள் .......... 5
ஆரோக்கியம் .......... 5

**2 கட்டாய பாடசாலை .......... 6**
நோக்கங்கள் மற்றும் ஒழுங்கமைப்பு .......... 6
பாலர்பாடசாலை .......... 6
ஆரம்பநிலை (1. – 6. வகுப்பு) .......... 6
ஆரம்பநிலையிலிருந்து மத்தியதர நிலைஐ ற்கு வகுப்பேற்றம் .......... 7
மத்தியதர நிலைஐ (7. - 9. வகுப்பு) .......... 7
புதிதாக வந்து சேரும் பிள்ளைகள் மற்றும் இளையோர் .......... 8

**3 கட்டாய பாடசாலையின் பின்பு .......... 9**
தொழிற்கல்வி வசதிகள் கட்டாயபாடசாலையின் பின்பு .......... 9
தொழிலுக்கான அடிப்படைக்கல்வி (தொழிற்கல்வி) .......... 9
இடைத்தீர்வுகள் / பாலம்போன்ற வழங்கல்கள் .......... 9
மேலதிக தகவல்கள் .......... 9

**4 பெற்றோர் மற்றும் கட்டாய பாடசாலை .......... 10**
ஒன்றுசேர்ந்து இயங்குதல் .......... 10
பரஸ்பர தகவல் பரிமாற்றம் .......... 10
மொழிபெயர்ப்பு .......... 10
முக்கிய முடிவுகள் .......... 10
சேர்ந்து செயற்படல் .......... 10

**5 கட்டாய பாடசாலையில் பிரச்சனையான சந்தர்ப்பங்கள் .......... 11**
பிரச்சனையான சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ளும் முறை .......... 11
ஒழுக்கப் பிரச்சனைகளின் போதான நடவடிக்கை .......... 11

**6 வளர்ப்பில் பிரச்சனையான நிலைமை .......... 11**
வல்லுனரின் ஊடான ஆலோசனை .......... 11

**7 பாடசாலை வெற்றிக்கு பெற்றோரின் பங்களிப்பு .......... 12**
ஆர்வம் காட்டுதல் .......... 12
உற்சாகப்படுத்தல் மற்றும் ஆதரவளித்தல் .......... 12
புதிய ஊடகங்களுடன் ஒத்துப்போகும் வரைமுறைகள் .......... 12

**8 விளக்க அட்டவணை .......... 13**

**அறிவித்தல்**
பேர்ண் மாநிலத்தில் ஜேர்மன் மற்றும் பிரெஞ்சு மொழி பேசும் பகுதிகள் உள்ளன. இத்தகவற் பிரசுரத்தில் நீங்கள் ஜெர்மன்மொழி பேசும் மாநிலப்பகுதியின் தகவல்களைப் பெறலாம். ஜேர்மன்மொழியிலான முக்கிய குறிப்புகள் பச்சை நிற எழுத்துக்களில் தரப்பட்டுள்ளது.

# 1 முக்கியமானவை சுருக்கமாக

## பொதுவானது
Allgemeines

- கட்டாயமாக பாடசாலை செல்லும் காலம் பதினொரு வருடங்களாகும். பாலர்பாடசாலைக்கு நான்கு வயதுடன் செல்ல ஆரம்பிப்பர். கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்பு இளையோர் இரண்டு முதல் நான்கு வருடங்கள் ஒரு கற்கைநெறியை மேற்கொள்வர். இதன்போது ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வார்கள் அல்லது ஒரு தொடரும் பாடசாலைக்குச் செல்வார்கள்.

| | | |
|---|---|---|
| | **மத்தியதர நிலை II**<br>**Sekundarstufe II**<br>தொழிற்கல்வி அல்லது தொடர் பாடசாலைகள் | 2 - 4 வருடம் |
| **கட்டாய பாடசாலை**<br>**Volksschule** | **மத்தியதர நிலை I** (7. – 9. வகுப்பு)<br>**Sekundarstufe I**<br>கட்டாயமானது<br>- இரண்டு முதல் மூன்று வரையான வித்தியாசமான கற்கைநெறித் தரங்களில் கற்பிக்கப்படுகின்றது.<br>- தொழிற்தேர்ச்சிக்கான தயார்ப்படுத்தல் | 3 வருடம் |
| | **ஆரம்பநிலை** (1. – 6. வகுப்பு)<br>**Primarstufe**<br>கட்டாயமானது<br>- 5ம் மற்றும் 6ம் வகுப்புகளின்போது வகுப்பேற்ற நடவடிக்கைகள்: மத்தியதர நிலைI இல் வித்தியாசமான கற்கைநெறி தரங்களுக்குப் பிரித்து விடப்படுவர். | 6 வருடம் |
| | **பாலர்பாடசாலை**<br>**Kindergarten**<br>- கட்டாயமானது, நுழைவு 4 வயதில் | 2 வருடம் |

- அனைத்து பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு தாம் வசிக்கும் இடங்களில் இலவசமான பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை செல்லும் உரிமை உள்ளது. கிராமசபை மாணவர்களுக்கு கற்கும் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை இலவசமாக வழங்கும்.

- பெண்பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகள் அடிப்படையில் ஒன்றுசேர்த்தே கற்பிக்கப்படுவர். இருபாலாருக்கும் ஒரேவிதமான கல்விக் குறிக்கோள் அமைந்திருக்கும்.

- கட்டாய பாடசாலை மதரீதியாக பக்கச் சார்பில்லாது. பொதுவான கற்கைநெறியின்போதும் மற்றும் வேறு எண்ணங்களையும், வேறு நம்பிக்கைகளையும் கொண்டவர்களின் வளர்ப்புமுறையை மதிப்பதற்காகவும் பல்வேறு சமயங்கள், பாடங்களின்போது விடயமாக எடுக்கப்படும். கிறிஸ்தவத்தைக் கடைப்பிடிக்கும் சமுதாயமாகையால் கிறிஸ்தவ திருவிழாக்களான நத்தார் போன்றவை பாடத்தின்போது இடம்பிடித்துக் கொள்ளும். பிள்ளைகள் மற்றும் இளையோர் அதேபோன்று அவர்களது பெற்றோரின் மதச் சுதந்திரம் கவனத்தில் எடுக்கப்படும்.

- கட்டாய பாடசாலைகளுடன், தனியார் பாடசாலைகளும் உள்ளன. இதற்கு மாநில அனுமதி தேவைப்படுவதுடன் இங்கு செல்வதற்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும்.

- உடல் அல்லது உள வலுவிழந்த பிள்ளைகள் மற்றும் இளையோர் இயலுமானவரை கட்டாய பாடசாலை அல்லது அவர்களது தேவைக்கு ஏற்ப விசேட பாடசாலைக்குச் செல்வார்கள். உகந்த பாடசாலை மற்றும் ஆதரவளிக்கும் சாத்தியங்கள் குறித்த (நான்கு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கும்) விபரங்களை உங்கள் பிரதேசத்தின் மாநில கல்விக்கான ஆலோசனை நிலையத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்: www.erz.be.ch/erziehungsberatung

## பாடசாலை வருடம் மற்றும் பாடசாலை விடுமுறை
Schuljahr und Schulferien

பாடசாலை வருடம் ஆவணி நடுப்பகுதியில் ஆரம்பமாகி ஆடி தொடக்கத்தில் முடிவடைகின்றது. பிள்ளைகளுக்கும், இளையோருக்கும் வருடத்தில் 38 அல்லது 39 கிழமைகள் பாடங்கள் இடம்றெும். விடுமுறைக் காலம் பாடசாலை வருடத்தில் பகிர்ந்து வழங்கப்படும்.

**இலையுதிர்கால விடுமுறை** புரட்டாதி, ஐப்பசியில்: மூன்று கிழமைகள்

**மாரிகால விடுமுறை** மார்கழி, தையில்: இரண்டு கிழமைகள்

**விளையாட்டு விடுமுறை:** ஒரு கிழமை

**இளவேனிற்கால விடுமுறை** சித்திரையில்: இரண்டு கிழமை

**கோடைகால விடுமுறை** ஆடி, ஆவணியில்: ஐந்து கிழமைகள்

சரியான விடுமுறைத் திகதிகள் மற்றும் பாடசாலை விடுமுறை நாட்கள் குறித்த விபரங்களை நீங்கள் உங்கள் கிராமசபையில் பெற்றுக்கொள்ளலாம்.

## நேர அட்டவணை
Stundenplan

பாடங்கள் திங்கள் முதல் வெள்ளிவரை இடம்பெறும். ஒரு பாடம் 45 நிமிடங்கள் நடைபெறும். முற்பகலில் குறைந்தது 4 பாடங்கள் எப்பொழுதும் ஒரே நேரத்தில் தொடங்கி முடியுமாறு வழங்கப்படும் (குறிப்பிட்டநேரம்). பிற்பகலின்போது பாட நேரங்கள் மாறுபடும் (இரண்டு முதல் நான்கு பாடங்கள்). வகுப்புகளைப் பொறுத்து ஒன்று முதல் நான்கு பிற்பகல் பாடசாலை விடுமுறையாக இருக்கும். பாலர்பாடசாலையிலும், ஆரம்பநிலையிலும் புதன்கிழமை பிற்பகலில் பாடங்கள் இருக்காது. உங்கள் பிள்ளைக்கான அடுத்த பாடசாலை வருட நேர அட்டவணையை வகுப்பாசிரியர் வழங்குவார்.

பெற்றோராகிய நீங்கள், உங்கள் பிள்ளை பாடங்களுக்கு நேர அட்டவணைப்படி செல்கின்றதா என்பதை அவதானித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளீர்கள். பாட நேரங்கள் தவிர்ந்த வேளைகள் மற்றும் பாடசாலை செல்லும் வழிகளில் நீங்களே உங்கள் பிள்ளைக்கு பொறுப்பு வகிக்கின்றீர்கள்.

இதையும் பார்க்கவும்: „வராமலிருத்தல் மற்றும் விடுமுறை பெறுதல்“ (பக்.4) மற்றும் „பெற்றோர் மற்றும் பாடசாலை“ (பக். 10).



## நாள் பாடசாலை
Tagesschule

சிறார்களுக்கு பாடங்களுக்கு முன்பாக, மதிய இடைவேளையில் அல்லது பாடங்கள் முடிந்த பின்பு **பராமரிப்பு** ஒன்று தேவைப்படின், பலர் கேட்டுக்கொண்டால் கிராமசபை நாள் பாடசாலையை ஒழுங்கு செய்யும்; அநேகமாக கட்டாய பாடசாலையின் கட்டிடத் தொகுதிகளுக்குள்ளேயே இது அமைந்திருக்கும்.

நாள் பாடசாலை மூன்று வித்தியாசமான வசதிகளைக் கொண்டு அமைந்திருக்கும்:

- பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக காலை பராமரிப்பு
- மதிய பராமரிப்பு உணவு வசதிகளுடன்
- பிற்பகல் பராமரிப்பு பாடங்கள் முடிந்த பின்பாக அல்லது பாடங்களற்ற பிற்பகல்களில்

மதிய மற்றும் பிற்பகல்வேளை பராமரிப்பு வசதிகளின்போது வீட்டுப்பாடம் செய்வதற்கு உதவி கிடைக்கும். பெற்றோர் இவ்வாறான வசதிகளை தமது தேவைக்கேற்றபடி தெரிவுசெய்து கொள்ளலாம். நாள் பாடசாலை வசதிகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். இக் கட்டணங்கள் வருமானம், சொத்துக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அளவு என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படும்.

நாள் பாடசாலையின் வழங்கல்களையிட்ட மேலதிக தகவல்களை www.erz.be.ch/tagesschulen என்னும் இணையத்தளத்தில் பார்வையிடலாம் அல்லது ஆசிரியர்களை அல்லது பாடசாலை அதிபரை நீங்கள் நாடுங்கள்.

குடும்பத்திற்கு வெளியில் பிள்ளைகளைப் பராமரிக்கும் மேலதிக வசதிகளை (பிள்ளைகள் பராமரிப்பு நிலையம், வீட்டில் பராமரிக்கும் பெற்றோர் போன்றவை) www.gef.be.ch > Familie என்ற இணையத்தளத்தில் காணலாம்.

## வீட்டுப்பாடங்கள்
Hausaufgaben

வீட்டுப்பாடங்கள் பாடசாலைப் பாடநேரங்களுக்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது. வீட்டுப்பாடங்களின்போது படித்த பாடங்கள் ஆழமாக அல்லது மீள பயிற்சி செய்யப்படும். உங்கள் பிள்ளை வீட்டுப்பாடம் செய்வதற்கு அமைதியான இடம் அமையுமாறு நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்.

வீட்டுப்பாடங்களின் உள்ளடக்கத்தை பெற்றோரின் உதவியின்றி செய்து முடிக்கக் கூடியதாக இருக்கும். உங்கள் பிள்ளையால் தனது வீட்டுப் பாடங்களை தனியாக செய்யமுடியவில்லை என நீங்கள் அவதானித்தால், அது குறித்து உரிய காலத்துடன் பிள்ளையின் ஆசிரியருடன் கதைத்துக் கொள்ளுங்கள்.

## மதிப்பீடு
Beurteilung

ஆகக் குறைந்தது வருடத்தில் ஒருமுறை அனைத்து நிலைகளிலும் வகுப்பாசிரியருக்கும் பெற்றோருக்கும் இடையிலான **கலந்துரையாடல்** இடம்பெறும். இக் கலந்துரையாடலில் கற்றல் முன்னேற்றம் மற்றும் பிள்ளைகளின் செயற்பாடு, சமூக நடைமுறைகள் குறித்து கலந்துரையாடப்படும்.

ஆரம்பநிலையில் கற்கும் பிள்ளைகள் தமது பாடசாலை வருட நிறைவில் எழுத்து மூலமான **மதிப்பீட்டு அறிக்கை**யைப் பெற்றுக்கொள்வர். அது ஒவ்வொரு பாடத்திலும் கற்றல் குறிக்கோளை எந்தளவில் அடைந்துள்ளனர் என்பது குறித்த விபரங்களை தரும். 3ம் வகுப்பிற்கு மேல் மாணவர்கள் அடைந்த ஆற்றல் மதிப்பீட்டு அறிக்கையில் புள்ளிகளாகப் பதிவுசெய்யப்படும். மத்தியதர நிலைIஇன் மாணவர்கள் ஒவ்வொரு பாடசாலைத் தவணை முடிவிலும் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்வர். இதில் அவர்களின் செயற்திறன் மற்றும் கற்கும்விதம் குறித்தும் மதிப்பிடப்படும்.

புள்ளிகள் அளவீட்டில் 1 தொடக்கம் 6 வரை வழங்கப்படும் (6=மிகநல்ல புள்ளி, 4ற்கு குறைவாக=கற்கும் குறிக்கோளை அடையவில்லை). இதன்போது அரைப் புள்ளிகளும் வழங்கப்படும் (உ-ம் 5.5 அல்லது 4.5).

மதிப்பீடு குறித்த மேலதிக விபரங்களை பல மொழிகளில் அறிந்து கொள்ள பார்க்கவும்:
www.erz.be.ch/beurteilung > Elterninformation

## வராமலிருத்தல் மற்றும் விடுமுறை பெறுதல்
Absenzen und Dispensationen

- பெற்றோராகிய நீங்கள், உங்கள் பிள்ளையை ஒழுங்காக நேர அட்டவணைப்படி பாலர்பாடசாலைக்கு அல்லது பாடசாலைக்கு அனுப்பிவைக்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். தமது பிள்ளைகளை தெரிந்து கொண்டு பாடசாலைக்கு அனுப்பி வைக்காத பெற்றோருக்கு தண்டனை வழங்கப்படலாம்.
- பெற்றோராகிய நீங்கள் ஆசிரியருக்கு உங்கள் பிள்ளை வராமலிருந்த காரணத்தை அறிவியுங்கள்: முன்பே **வராமலிருக்கும்** நிலை தெரிந்திருந்தால் அதுகுறித்து முற்கூட்டியே உரிய ஆசிரியருக்கு அறிவியுங்கள். எதிர்பாராமல் வராமலிருக்க நேரிடின் இயலுமானவரை பாதுகாப்புக் காரணங்களுக்காக விரைவாக அறிவித்துக்கொள்ள வேண்டும்.
- உங்கள் பிள்ளை பின்வரும் காரணங்களுக்காக வராமலிருந்தால் மன்னித்ததாக (அனுமதித்தல்) ஏற்றுக்கொள்ளப்படும்: சுகவீனம் அல்லது பிள்ளைக்கு விபத்து, பிள்ளையின் குடும்பத்தில் சுகவீனம் அல்லது இறப்பு, வீடுமாற்றம், வைத்தியர் மற்றும் பல் வைத்தியரிடம் செல்லும் தவணை.
- ஒரு பிள்ளை மன்னிக்கப்பட்ட அல்லது மன்னிக்கப்படாத நிலையில் வரத்தவறிய பாடங்களின் எண்ணிக்கை குறித்து மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- **விடுமுறைபெறும்** அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அதற்கான காரணங்களுடன் நான்கு கிழமைகளுக்கு முன்பாக எழுத்துமூலம் பாடசாலை அதிபரிடம் விண்ணப்பிக்க வேண்டும். விடுமுறை பெறுதல் பின்வரும் காரணங்களுக்காக அனுமதிக்கப்படலாம்: மிகவிசேடமான சமய திருநாட்களைக் கொண்டாட, முக்கிய குடும்ப நிகழ்வு, தாய்மொழி மற்றும் கலாச்சார வகுப்புகளுக்குச் செல்லுதல் (HSK), தொழிலைமுகர்ந்து பார்த்தல் போன்றவைகளாகும்.

- **பெற்**றோர் தமது பிள்ளைகளுக்கு **ஒரு பாடசாலை வருடத்தில் ஐந்து அரைநாட்கள் வரை** விடுமுறை எடுக்க உரிமையுண்டு. இந்த அரைநாட்களுக்கு எவ்வித காரணமும் காட்டாமல் பாடங்களுக்கு வராமலிருக்கலாம். நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அரைநாள் விடுமுறையை பாவித்துக் கொள்ள விரும்பினால், வகுப்பாசிரியருக்கு இரண்டு நாட்கள் முன்பாக அது குறித்து அறிவித்துக் கொள்ளுங்கள்.

## மேலதிகமாகக் கற்கும் மற்றும் ஓய்வுநேர வசதிகள்
Bildungs- und Freizeitangebote

பாடசாலையில் கட்டாய பாடங்களுடன் மேலதிகமாக **தெரிவுப் பாடவசதிகளும்** உண்டு. பாடசாலை இவ்வசதிகளின்போது இசை மற்றும் கலை/கைவேலை அதேபோன்று பாடங்கள் சாராத வகுப்புகள் மற்றும் வேலைத்திட்டங்களை வழங்கிக் கொள்ளும்.

மத்தியதர நிலைI இல் இத்துடன் மேலதிகமான வசதிகளும் சேர்ந்து கொள்ளும். தெரிவுப்பாடங்களுக்கு பெற்றோர் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

**தாய்மொழி கலாச்சார வகுப்பில் (HSK)** பல மொழிகளுடன் வளரும் சிறுவர்கள் மற்றும் இளையோர் தமது முதல்மொழி (தாய் அல்லது தந்தையின் மொழி) மற்றும் தாய் அல்லது தந்தையின் பூர்வீககலாச்சாரத்தைப் பற்றிய அறிவை மேலும் விருத்தி செய்து கொள்ளலாம். இந்த வகுப்புகள் பூர்வீகநாடுகளால் அல்லது தனியார் அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. இப்படியான வசதிகளில் சிலவற்றிற்கு கட்டணம் அறவிடப்படும்.

மேலதிக விபரங்கள் மற்றும் வசதிகளைக் காண்பதற்கு கீழே தரப்படும் இணையத்தளத்தைப் பார்வையிடவும்: www.erz.be.ch/hsk

**விளையாட்டு மற்றும் வேறு ஓய்வுநேர வசதிகளை** பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு அதிகமாக தனியார் அமைப்புக்கள் ஏற்பாடு செய்வதுடன் சொந்தவிருப்பில் செயற்படுவதை அடிப்படையாகக் கொண்டவை. வழமையாக அமைப்புக்களின் வழங்கல்களில் பங்கேற்பவர்கள் ஒரு வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.



பிரதேசரீதியான **இசைப்பாடசாலை** தரமான ஆசிரியர்களுடன் பல்வேறு விதமான வாத்தியங்களைக்கற்றுக் கொடுக்கின்றது. இந்த வகுப்புகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வாறாக உள்ள இசைப்பாடசாலைகள் குறித்த விபரங்களை கீழ்வரும் இணையத்தளத்தில் பார்க்கலாம்: www.vbms.ch > Mitglieder

விளையாட்டு மற்றும் வேறு ஓய்வுநேர வசதிகள் குறித்த தகவல்களை நீங்கள் உங்கள் கிராமசபையில் அறிந்து கொள்ளலாம்.

## ஆரோக்கியம்
Gesundheit

பிள்ளைகள் மற்றும் இளையோர் பாலர்பாடசாலை, அதேபோன்று 4ம் மற்றும் 8ம் வகுப்புகளில் கிராமநிர்வாகத்தின் **பாடசாலை வைத்தியரினால்** பரிசோதிக்கப்படுவர். இப்பரிசோதனை கட்டாயமானதும் இலவசமானதுமாகும். இது ஆரோக்கிய ஒழுங்கின்மைகளான கேட்டல், பார்த்தல் மற்றும் கதைப்பதில் தடைகள் அல்லது உடல் நிற்கும்முறை மற்றும் அசைதலில் தடைகள் இருந்தால் அவைகளை உரிய காலத்துடன் அறிந்து கொள்வதற்கு பயன்படும். ஒரு பிள்ளைக்கு மேலதிக தெளிவுபடுத்தல் அல்லது சிகிச்சை தேவைப்படின், பாடசாலை வைத்தியர் பெற்றோருக்கு அது குறித்து அறிவிப்பதுடன் மேலும் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

அத்துடன் பிள்ளைகளின் மற்றும் இளையோரின் பற்கள் கிரமமாக **பாடசாலை வைத்தியரினால்** பரிசோதனை செய்யப்படும். இந்தப் பரிசோதனையும் கட்டாயமானதும் இலவசமானதுமாகும். சிகிச்சைகள் தேவைப்படின் பெற்றோருக்கு அதுபற்றி அறிவிக்கப்படும். இதற்கான செலவை பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும். கட்டாய பாடசாலையில் பிள்ளைகள் சரியான முறையில் **பற்களைப் பேணுவது** குறித்து பயிற்றுவிக்கப்படுவார்கள்.

உங்கள் பிள்ளை நோயினால் பாதிக்கப்பட்டோ அல்லது ஒழுங்காக மருந்துகளை எடுக்க வேண்டியிருந்தாலோ ஆசிரியர்களுக்கு அதுகுறித்து அறிவித்துக் கொள்ளுங்கள்.

பிள்ளைகளும், உடல்நலமும் குறித்து பல மொழிகளில் தகவல்களை அறிந்து கொள்ள: www.migesplus.ch > Kind & Gesundheit

### நோக்கங்கள் மற்றும் ஒழுங்கமைப்பு
Ziele und Organisation

பாடசாலை **அறிவு, செயற்திறன், மனோபாவம் மற்றும் செயற்படுத்தும் திறன்** ஆகியவற்றைப் பெற ஊக்குவிப்பதோடு, பிள்ளைகள் மற்றும் இளையோர் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தைப் பற்றியறிந்து, இணைந்து வாழும் ஆற்றலைப் பெறவும், சுதந்திரமான, பொறுப்புள்ள, ஆழுமையுடைய மனிதர்களாக வளர்ச்சி பெறவும், அத்துடன் கட்டாயபாடசாலையின் பின்பு ஒரு தொழிற்கல்வியை அல்லது தொடரும் பாடசாலையை வெற்றிகரமாக மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆசிரியர்கள் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை ஆகியவற்றின் வரையறுக்கப்பட்ட நோக்கங்களையுடைய **பாடத்திட்டத்தை** அடிப்படையாகக் கொண்டு பாடங்களைத் திட்டமிடுவர்.

ஒவ்வொரு கிராமசபையிலும் பாடசாலை நிர்வாகக்குழு பாலர்பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்குப் பொறுப்பு வகிப்பதுடன் அவற்றைக் கண்காணிக்கின்றது. கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் **பாடசாலை பரிசோதகர்கள் மாநில** கண்காணிப்பை மேற்கொள்வர்.

**பாலர்பாடசாலைக்குப் பதிவுசெய்யும்படி** பெற்றோர் கிராமசபையால் கேட்டுக்கொள்ளப்படுவர்.

### பாலர்பாடசாலை
Kindergarten

பாலர்பாடசாலையில் பிள்ளைகள் **விளையாடும் போது** கற்பர் அத்துடன் **கற்கும் போது** விளையாடுவர். அவர்கள் மேலும் நன்றாகக் கணிப்பிடவும், தம்மை வெளிப்படுத்தவும் கற்பதுடன், ஒரு பெரிய குழுவில் தம்மை இணைத்துக் கொள்ளவும், சூழலுக்கு ஏற்றவிதத்தில் பழகிக்கொள்ளும் அனுபவங்களையும் பெறுகின்றனர். பாலர்பாடசாலையில் சிறுவர்கள் முழுவளர்ச்சிக்குமான ஊக்குவிப்பைப் பெறுவதுடன் பாடசாலையில் நுழைவதற்கும் தயார் படுத்தப்படுகின்றனர். பாலர்பாடசாலையில் ஆசிரியர்கள் ஒவ்வொரு பிள்ளையின் **வளர்ச்சியையும்** அவதானித்து, உதவிசெய்வதுடன் அவர்களின் **வளர்ச்சிப்படிநிலை** குறித்து பெற்றோருடன் கதைப்பார்கள்.



தனிப்பட்ட பகுதிகளில் **விசேட ஊக்குவிப்பு** தேவைப்படும் பிள்ளைகளுக்கு (உதாரணமாக பேச்சு மற்றும் அசைவில் வளர்ச்சி) மேலதிக வல்லுனர்களின் உதவி வழங்கப்படும்.
வழமையாக பாலர்பாடசாலை இரண்டு வருடங்கள் நடைபெறும். ஒவ்வொரு பிள்ளைகளினதும் வளர்ச்சி நிலையைப் பொறுத்து **பிள்ளை ஆரம்பநிலைக்கு வகுப்பேற்றப்படுவது** ஒரு வருடம் தாமதமாக இடம்பெறலாம் அல்லது முதலாம் வகுப்பு பாடங்களை இரண்டு வருடங்கள் கற்கவேண்டி ஏற்படலாம்.

பலமொழிகளோடு வளரும் பிள்ளைகள், பாலர்பாடசாலைக்குள் நுழையும் காலத்தில் உள்ளூர் மொழியை குறைவாக விளங்கிக் கொள்பவர்களாக மற்றும் கதைப்பவர்களாக இருந்தால் மேலதிக உதவிகளைப் பெற்றுக்கொள்வர். **ஜேர்மன்மொழியை நன்றாகத் தெரிந்திருப்பது** பிற்காலத்தில் உங்கள் பிள்ளை **பாடசாலையில் வெற்றி** பெறுவதற்கு முக்கியமாக இருக்கும். ஆகவே பாலர்பாடசாலைக்குச் செல்ல முன்பு உங்கள் பிள்ளை வேறு பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடுவதையும் அதன்போது உள்ளூர் மொழியை கற்றுக்கொள்ள முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ளுங்கள். 2 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கான **விளையாட்டு மற்றும் பராமரிப்பு வசதிகள்** மற்றும் அதேபோன்று தாய்மார் மற்றும் தந்தைமார் சந்திப்புக்கள், விளையாடும் குழுக்கள் அல்லது சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் குறித்து உங்கள் கிராமசபையில் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

பார்க்க „பாடசாலை வெற்றியில் பெற்றோரின் பங்களிப்பு“ (பக். 12).

சில கிராமசபைகளில் பாலர்பாடசாலைப் பிள்ளைகளும், முதல் இரண்டு வகுப்பு மாணவர்களும் பகுதியாக அல்லது முழுமையாக ஒருமித்துக் கற்பிக்கப்படுவர் (Basisstufe அல்லது Cycle élémentaire).

பாலர்பாடசாலை குறித்த விபரமான தகவல்கள் பல மொழிகளில்:
www.erz.be.ch/elterninfo > Kindergarten

### ஆரம்பநிலை (1. – 6. வகுப்பு)
Primarstufe

ஆரம்பநிலையில் மாணவர்கள் **வாசிக்க, எழுத மற்றும் கணக்குச்செய்ய** பயிலுவதுடன் அதில் தேர்ச்சியும் பெறுகின்றனர். அவர்கள் சூழலுக்குகேற்ற அறிவைப் பெறுவதுடன், வேலைசெய்யும் நுட்பங்களையும் அறிந்து கொள்கின்றனர். அநேகமாக வெவ்வேறு பாடங்களில் ஒரே விடயம் கையாளப்படுகின்றது. மாணவர்கள் தன்னிச்சையாக மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுவதை அதிகரிக்கக் கற்றுக்கொண்டு வேலைசெய்கின்றனர்.

3ம் வகுப்பு தொடக்கம் ஜெர்மன்மொழிபேசும் மாநிலப் பகுதிகளில் உள்ள மாணவர்கள் **முதலாவது பிற மொழியாக பிரெஞ்சுமொழியைக்** கற்றுக் கொள்வதோடு, பிரெஞ்சு மொழிபேசும் மாநிலப் பகுதிகளில் **ஜெர்மன்மொழியைக்** கற்றுக்கொள்வர்.

2013 தொடக்கம் இரு மாநிலப்பகுதிகளிலும் 5ம் வகுப்பு தொடக்கம் **ஆங்கிலம்** கற்றுக் கொள்வர்.

5ம் மற்றும் 6ம் வகுப்புக் காலத்தில் உங்கள் பிள்ளை ஆரம்பநிலையில் இருந்து மத்தியதர நிலைl (Sekundarstufe I) இற்கு மாறும் **வகுப்பேற்ற நடைமுறைகள்** இடம்பெறும் (தொடரும் பக்கங்களைப் பார்க்க).

பிள்ளைகளுக்கு, எந்தவொரு புலத்திலாவது (மொழி, அசைதல், கற்றல், அவதானம்) கற்கும் நோக்கத்தை அடைவதற்குப் பிரச்சனைகள் இருப்பின், தனிப்பட்ட ரீதியில் அவர்களுக்காக தீர்மானிக்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்காக கற்பிக்கப்படுவர் அல்லது இதற்காக விசேட பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் உதவி பெறப்படும்.

இதற்காக பிள்ளையின் **கற்றல்பிரச்சனை** பெற்றோரின் சம்மதத்துடன் ஒரு துறைசார் இடத்தினூடாக தெளிவுபடுத்தப்படும். இத்துறைசார் இடம் **விசேடகற்பித்தல்** ஊடாக ஆதரவளிக்கவேண்டிய தேவை உள்ளதா என்பதை மதிப்பீடு செய்யும்.

இவ் **விசேடகற்பித்தல்** (Spezialunterricht) பாடநேரத்தின்போது வகுப்பில் அல்லது வகுப்பிற்கு வெளியே குழுவாக இடம்பெறும். இதற்கும் மேலாக அநேக கிராமசபைகளில் கற்றல்பிரச்சனையுள்ள பிள்ளைகள் **விசேட வகுப்புக்கு** (Besondere Klasse ) செல்லக்கூடிய வசதிகள் உள்ளன. ஒரு விசேட வகுப்பு வழமையான வகுப்பு போல் அல்லாது குறைவான மாணவர்களைக் கொண்டிருப்பதோடு, கற்பதில் பிரச்சனையுள்ள பிள்ளைகளுக்கு உதவியளித்துக் கற்பிப்பதற்கு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும் கொண்டிருக்கும்.

அதேபோன்றே விசேட **திறமையுள்ள மாணவர்களுக்கு** ஒரு விசேட வழங்கல் உண்டு. இதில் பங்குபற்றுவதற்கு முன்நிபந்தனையாக துறைசார் இடத்தின் மதிப்பீடு அமையும்.



## ஆரம்பநிலையிலிருந்து மத்தியதர நிலைI ற்கு வகுப்பேற்றம்
Übertritt von der Primar- in die Sekundarstufe I

5ம் மற்றும் 6ம் வகுப்புக் காலத்தில் ஒரு **வகுப்பேற்ற நடைமுறை** உங்கள் பிள்ளை ஆரம்பநிலையிலிருந்து மத்தியதர நிலைI ற்கு மாறுவதை நெறிப்படுத்தும்.

மத்தியதர நிலைI (7. – 9. பாடசாலை வருடம்) இன் கற்பித்தல் இரண்டு தொடக்கம் மூன்று **வேறுபட்ட தரங்களில்** பிரிக்கப்பட்டுள்ளது. 7ம் பாடசாலை வருடம் தொடக்கம் மாணவர்கள் அவர்களின் பாடசாலை செயற்திறன் மற்றும் எதிர்பார்க்கப்படும் பாடசாலைக் கல்வி வளர்ச்சி காரணமாக, வேறுபட்ட தரங்களில் ஒன்றுக்கு பிரித்து அனுப்பப்படுவர். வகுப்பு ஆசிரியர் பிள்ளை மற்றும் பெற்றோருக்கு வகுப்பேற்ற நடைமுறை பற்றி 5ம் வகுப்பில் அறியத்தருவார்.

இதையும் பார்க்க „மத்தியதர நிலைI“ (பக். 7) மற்றும் கட்டாய பாடசாலையின் பின்பு (பக். 9).

கட்டாயபாடசாலையின் மதிப்பீடு மற்றும் மத்தியதர நிலைIற்கு வகுப்பேற்றம் குறித்த தகவல்கள் பல மொழிகளில்:
**www.erz.be.ch/beurteilung** > Elterninformation

## மத்தியதர நிலைஐ (7. - 9. வகுப்பு)
Sekundarstufe I

மத்தியதர நிலைIல் மாணவர்கள் அவர்கள் திறமையின் தரத்திற்கேற்ப இரண்டு தொடக்கம் மூன்று **வேறுபட்ட தரங்களில்** கற்பிக்கப்படுவார்கள்.

மத்தியதர நிலைI ரேயால்வகுப்பு (Realklassen) மற்றும் செக்குண்டார் வகுப்பு (Sekundarklassen) என பிரிக்கப்படும். செக்குண்டார் வகுப்புகளில் உள்ள இளையோர் மிக அதிகமான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும். நன்று தொடக்கம் மிகவும் நல்ல திறமைகளைக் கொண்டுள்ள செக்குண்டார் வகுப்பு மாணவர்கள் தொடரும் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு ஆயத்தப்படுத்தப்படுவர். சில கிராமசபைகள் இதற்காக விசேடமான செக்குண்டார் வகுப்புகளை (spezielle Sekundarklassen) நடத்துகின்றன. ஒவ்வொரு கிராமசபையும் ரேயால் மற்றும் செக்குண்டார் மாணவர்கள் பிரிக்கப்பட்டா அல்லது பகுதியாக ஒன்றுசேர்ந்தா கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் தாமாகத் தீர்மானித்துக் கொள்வர்.

விசேடகற்பித்தல் மற்றும் விசேட வகுப்புகள் ஊடாக ஆதரவுபெறுவோருக்கும் மத்தியதர நிலைI உண்டு.

மத்தியதர நிலைIல் பயிலும் மாணவர்களிடம் அதிகரித்துச் செல்லும் தனித்துச் செயற்படும்திறன் தனியாக அல்லது குழுவாக இயங்குகையில் எதிர்பார்க்கப்படும். பொது அறிவுக்கல்வி மேலும் பரவலாக்கப்பட்டு ஆழமாக்கப்படும். அத்துடன் மாணவர்கள் ஒரு தொழிற்கல்வியை தெரிவு செய்ய அல்லது ஒரு தொடரும் பாடசாலைக்குச் செல்வதற்காகத் தயார்படுத்தப்படுவர்கள். இளையோரின் **தொழிற்தெரிவு** (Berufswahl) அவர்களின் தனிப்பட்ட ஆர்வம், பலம் மற்றும் பாடசாலை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். பாடசாலை இந்த முக்கிய படிநிலைக்கு ஆதரவளிப்பதுடன், இதுபற்றிய விடயங்கள் கற்பித்தலில் எடுத்துக் கையாளப்படும். பெற்றோர், வகுப்பாசிரியர்கள் மற்றும் தொழிற்கல்வி ஆலோசனை நிலையம் ஆகியவை ஒன்றுசேர்ந்து இளையோர் முடிவுஎடுக்கும் நடைமுறையை வழிநடத்துவர்.

வகுப்பாசிரியர் உரிய காலத்துடன் தொழிற்தெரிவு மற்றும் **தொழிற்கல்வியைக் கற்குமிடத்தைத் தேடிக்கொள்வதுடன்** தொடர்புடைய **நிபந்தனைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள்** குறித்து இளையோருக்கும் மற்றும் பெற்றோராகிய உங்களுக்கும் அறிவித்துக் கொள்வார்கள்.

இதையும் பார்க்க „கட்டாய பாடசாலையின் பின்பு“ (பக். 9) மற்றும் „மதிப்பீடு“ (பக். 4).

## புதிதாக வந்து சேரும் பிள்ளைகள் மற்றும் இளையோர்
Neuzuziehende Kinder und Jugendliche

புதிதாக வந்து சேரும் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை செல்லும் உங்கள் பிள்ளைக்கான தகவல்களை பெற்றோராகிய நீங்கள் உங்கள் கிராமசபையில் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் உங்கள் பிள்ளையை நேரடியாக அதற்குப் பொறுப்பான பாடசாலை அதிபரிடம் பதிவுசெய்யலாம். உங்கள் பிள்ளை சுவிசில் இருக்க வேண்டியிருந்தால் அல்லது பல மாதங்கள் தங்கியிருக்க நேரிடின் அதன்போது பாடசாலை செல்லுதல் கட்டாயமானதாகும். பாலர்பாடசாலையில் அல்லது பாடசாலையில் பாடசாலை வருடத்தின் எந்நேரத்திலும் சேர்ந்துகொள்ள முடியும்.

பெற்றோர் மற்றும் கையளிக்கப்படும் ஆசிரியரைக் கேட்டறிந்த பின்பு, புதிதாக வந்து சேரும் பிள்ளைகள் மற்றும் இளையோர் (வைத்திருக்கும் சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டும்) வயதுக்குத் தகுந்தவாறும், இவ்வகுப்பைக்கற்க எடுத்த வருடங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டும் (மத்தியதர நிலைIஇல் சென்ற தரத்தையும் கொண்டு) வகுப்பைத் தீர்மானிப்பார்கள். பாடசாலை அதிபரால் தீர்மானிக்கப்படும் இவ்வாறான வகுப்புப் பகிர்வு முதலில் தற்காலிகமானதாகவே இருக்கும்.

4ம் வகுப்புக்கு மேல், பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு கற்பிக்கும்மொழி தெரிந்திருக்காவிடின், கற்பிக்கும் மொழியை அவர்கள் கற்றுக்கொள்ள அதிகநேரத்தைச் செலவிடவும் மற்றும் பாடங்களில் ஏற்படும் இடைவெளிகளை (விசேடமாக பிறமொழிகள்) சரிப்படுத்திக் கொள்ளவும், வெளிநாட்டில் தாம் படித்த வகுப்பை மீண்டும் ஒருமுறை கற்றுக்கொள்வது சிறந்ததாக அமையும்.



கற்பிக்கும்மொழியை தெரிந்திருக்காத அல்லது குறைவாக தெரிந்திருக்கும் பிள்ளைகள் மற்றும் இளையோர் மேலதிக உதவியைப் பெற்றுக்கொள்வர். மேலதிக ஜெர்மன்மொழி பாடங்கள் **[Deutsch als Zweitsprache(DaZ)]** ஜெர்மன் மொழிபேசும் மாநிலப்பகுதியில் இலவசம். இவை பாடநேரத்தின் போது வகுப்புகளுக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ நடைபெறும்.

நகரங்களில் மற்றும் பிரதேசமையங்களில் பிள்ளைகள் மற்றும் இளையோர் ஆரம்பத்தில் கற்பிக்கும்மொழியைத் தெரியாதவர்களாக இருந்தால், அநேகமாக பத்து கிழமைகளுக்கு விரைவில் கற்பிக்கும்மொழி கற்பிக்கப்படும்.

விளையாட்டுக்கழகங்கள், நாள் பாடசாலை மற்றும் தாய்மொழி மற்றும் கலாச்சாரவகுப்பு (HSK) போன்றவைக்குச் செல்வது உங்கள் பிள்ளைக்கு **விரைவாக புதிய மொழியை மற்றும் சூழலை புரிந்து கொள்ளவும்** சமூகத்தில் இணைந்து வாழவும் உதவும்.

இதையும் பார்க்கவும் „கட்டாய பாடசாலையின் பின்பு“ (பக்.9)

# 3 கட்டாய பாடசாலையின் பின்பு

## தொழிற்கல்வி வசதிகள் கட்டாயபாடசாலையின் பின்பு
Ausbildungsmöglichkeiten nach der Volkschule

ஒரு குறிப்பிட்ட தொழிலைப் பயிலும் அல்லது தொடரும் பாடசாலை வழிவகைகள், நீங்கள் நினைத்திருப்பது போல் அல்லாமல் வேறு விதமாகவும் நடைபெறலாம்: முன்பு போல் அல்லாது வேறுவிதமாக அல்லது – நீங்கள் சுவிசில் வளராதவராக இருந்தால் – உங்கள் தாயகத்தைப் போலல்லாது வேறு விதமாக இருக்கலாம். உதாரணமாக இன்று 250க்கு மேற்பட்ட தொழில்களை, கட்டாய பாடசாலை படித்து முடித்த பின் கற்றுக்கொள்ள முடியும்.

கட்டாய பாடசாலையின் பின்பு ஒரு தேர்ச்சிக்கல்வியைக் கற்றுக் கொள்வது உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்: ஒரு தொழிற்கல்வியை அல்லது ஒரு தொடரும் பாடசாலையில் கற்றுத் தேறாது ஒரு தொழிலைப் பெற்றுக்கொள்ளும் போது பாதுகாப்பையும், எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறைக்கும். தொடர்கல்வி மற்றும் உயர்வடையும் சந்தர்ப்பங்கள் இல்லாது போகும்.

## தொழிலுக்கான அடிப்படைக்கல்வி (தொழிற்கல்வி)
Die Berufliche Grundbildung (Berufslehre)

அதிக இளையோர் கட்டாய பாடசாலைக் காலத்தின் பின்பு தமது தொழிலை ஒரு தொழிலுக்கான அடிப்படைக் கல்வியாகக் (தொழிற்கல்வி) கற்றுக் கொள்கின்றனர்: இரண்டு முதல் நான்கு வருட காலங்களில் தமது **தொழிற் பயிற்சியை ஒரு தொழிலகத்தில்** பெற்றுக்கொள்கின்றனர். அதேவேளையில் கிழமையில் இரண்டு தொடக்கம் மூன்று நாட்கள் தொழிற்கல்விப் பாடசாலைக்குச் (Berufsschule), செல்கின்றனர். அங்கும் இவர்கள் தொழில்சார்ந்த அறிவைப் பெறுவதுடன், பொதுப் பாடங்களையும் ஆழமாகக் கற்பர். கற்பவருக்கும், தொழிலகம் மற்றும் தொழிற்கல்வி பாடசாலை ஆகியோருக்கும் இடையே ஒரு **தொழிற்கல்வி ஒப்பந்தம்** கைச்சாத்திடப்படும். ஒருசில தொழில்களைப் பயிலும்போது தொழிற்கல்வி பாடசாலையில் மட்டுமே பயில வேண்டிய சாத்தியங்களும் ஏற்படலாம். [Handelsmittelschule (HMS) மற்றும் Lehrwerkstätten ]. தொழிலுக்கான அடிப்படைக்கல்வி, தொழிற்கல்வியின் இறுதிப்பரீட்சையை நிறைவுசெய்த பின்னர் சுவிஸ் நாடுதழுவிய அங்கீகாரம் உடைய தேர்ச்சிப்பத்திரத்துடன் நிறைவடையும்.

தொழிலகம் மற்றும் பாடசாலை இரண்டிலும் சேர்ந்து கற்றுக்கொள்வது காரணமாக இளையோர் ஒரு தொழிலைக் கற்று சித்திபெறும்போது வழமையாக தொழிற் சந்தையில் ஒரு தொழிலைப் பெறுவதற்கு சந்தர்ப்பங்கள் நிறையவே உள்ளன. அத்துடன் ஒரு தொழிலைக் கற்று முடித்த பின்பு மேலும் கற்றுக்கொள்ளக்கூடிய பல சாத்தியங்களுள்ளன.

தொழிற்கல்வியின்போது அல்லது அடிப்படைத் தொழிற் கல்வியை நிறைவு செய்தபின் மிகச் சிறந்த செயற்திறன் உடையவர்கள் தொழில் மத்துராவைப் (Berufsmaturität) பெறலாம். இதன்மூலம் துறைசார் பல்கலைக்கழகத்தில் (Fachhochschule FH) உயர்கல்வியைப் பெறும் சாத்தியமும் உண்டு.

மேலதிக தகவல்களுக்கு: www.erz.be.ch/berufsbildung

## நடுத்தரப்பாடசாலைகள்
Die Mittelschulen / *Les écoles moyennes*

**துறைசார் நடுத்தரப்பாடசாலைகள்** [Fachmittelschule (FMS)] மூன்று வருட காலத்திற்கு ஆரோக்கியம், கல்வி மற்றும் வளர்ப்பு/ சமூகவியல் போன்ற துறைகளில் தொழிற்கல்வியை கற்கத் தயார்படுத்துகின்றது.

பாடசாலையில் நன்கு கற்கும் மாணவர்கள் அதிக செயற்திறனைக் காட்டும்போது **கிம்நாசியம்** (Gymnasium) செல்வதற்கு சந்தர்ப்பமுண்டு. கிம்நாசியகல்வி 9வது பாடசாலை வருடத்தில் ஆரம்பித்து நான்கு வருடங்களுக்கு நடைபெறும் (9ம் பாடசாலை வருடத்தின் பின்னரும் இதில் சேர்ந்து கொள்வதற்கு சந்தர்ப்பமுண்டு). கிம்நாசியம் ஆழமான பொதுக்கல்வியை பல முதன்மைப் பாடங்களுடன் வழங்குகின்றது. இதில் பெறும் இறுதிப்பட்டம் (Matura) பல்கலைக்கழகத்தினுள் பரீட்சையின்றி நுழைய [Universität அல்லது Eidgenössische Technische Hochschule (ETH)] அல்லது ஒரு வருட பயிற்சியுடன் துறைசார் பல்கலைக்கழகத்தில் கற்க வழிவகுக்கின்றது.

வேறு மாநிலங்களிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து **புதிதாக வரும் இளையோர்** தமது கிம்நாசியக் கல்வியை பேர்ண் மாநிலத்தில் தொடர விரும்பினால், பல மொழிகளில் ஒரு தகவற்பிரசுரம் உள்ளது: www.erz.be.ch/aufnahmegym

துறைசார் நடுத்தரப்பாடசாலைகள் மற்றும் கிம்நாசியம் குறித்த தகவல்களுக்கு: www.erz.be.ch/mittelschulen

## இடைத்தீர்வுகள் / பாலம்போன்ற வழங்கல்கள்
Zwischenlösungen

பாடசாலைக்கல்வியோ அல்லது கற்பிக்கும் மொழியறிவோ ஓர் உயர்ந்த தொழிற்கல்வியைக் கற்கத் தொடங்குவதற்கு, 9வது பாடசாலைவருட நிறைவில் உங்கள் பிள்ளைக்கு போதாதிருந்தால், **ஒரு தொழிலுக்கு தயார்ப்படுத்தும் 10வது பாடசாலை வருடத்தைக்** கற்றுக் கொள்வதற்கு வசதியுண்டு. இந்த வசதியை **புதிதாக வந்து சேர்ந்த** இளையோர் 16 தொடக்கம் 18 வயதுவரை கற்பிக்கும்மொழி தெரியாமலோ அல்லது சிறிது தெரிந்திருந்தாலோ பயன்படுத்திக் கொள்ளலாம்: www.erz.be.ch/bvs

உரியகாலத்துடன் இவை குறித்தும் மேலதிக இடைத் தீர்வுகள் குறித்தும் உங்கள் பிள்ளையின் ஆசிரியரிடம் அல்லது பிரதேச தொழிற்தகவல் நிலையத்திலிருந்தும் தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் (BIZ).

## மேலதிக தகவல்கள்
Weitere Informationen

மேற்குறிப்பிட்ட தேர்ச்சிக்கல்விகளை விட கட்டாய பாடசாலையின் பின் வேறு மேலதிக வழங்கல்களும் உள்ளன. இவை குறித்த தகவல்களை பின்வரும் தொடர்புகளில் பெறலாம்:

தொழிற்தெரிவு பற்றிய தகவல்கள் மற்றும் பிரதேச தொழிற்தகவல் நிலையங்கள் உள்ள இடங்கள் (BIZ ): www.erz.be.ch/berufsberatung

தொழிலைத் தெரிவுசெய்வது குறித்த தகவல்கள் பல மொழிகளில்: www.berufsberatung.ch/dyn/8188.aspx

கட்டாய பாடசாலையின் பின் கற்பதற்கான வழிமுறைகள்: வரைபடம் www.erz.be.ch/berufsbildung

# 4 பெற்றோர் மற்றும் கட்டாய பாடசாலை

## ஒன்றுசேர்ந்து இயங்குதல்
Zusammenarbeit

பெற்றோரும், கட்டாய பாடசாலையும் சட்டரீதியாக ஒன்றுசேர்ந்து இயங்குவதற்குக் கடமைப்பட்டுள்ளனர். இந்த ஒன்றுசேர்ந்து இயங்கும் நடவடிக்கை தோழமையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன்போது பிள்ளை பாடசாலையில் வெற்றியடைவதற்கும் மற்றும் நன்மையடைவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

## பரஸ்பர தகவல் பரிமாற்றம்
Gegenseitige Information

**பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை** பெற்றோருக்கு முக்கிய நிகழ்வுகள் மற்றும் பாடங்களுடன் சம்பந்தமான திட்டங்கள் (நிகழ்ச்சிகள், பாடசாலைப் பயணங்கள் போன்றவை) மற்றும் பாடசாலைச் செயற்பாடுகளை (பாடசாலைக்கு அல்லது வகுப்புக்கு பிரித்தல், பாடநேரங்கள் போன்றவை) அறிவித்துக் கொள்ளும். இத்தகவல்கள் எழுத்து மூலமாக அல்லது **பெற்றோர் மாலைகள்** மற்றும் **பார்வையிடும் நாட்கள்** போன்ற தகவல் வழங்கும் நிகழ்வுகளில் வழங்கப்படும். இயலுமானவரை **பெற்றோர் இருவரும்** இவ்வாறான நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஒருவேளை பெற்றோரில் இருவரும் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்ள முடியாவிடில் நேரடியாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ உங்களை அழைத்த ஆசிரியருக்கு வரமுடியாதிருப்பதை அறிவித்து, இச்சந்தர்ப்பத்தில் இந்த தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் அறிந்து கொள்ளவும்.

பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை பிள்ளையின் வளர்ச்சிநிலை (பாடசாலையில்) மற்றும் நடந்துகொள்ளும் விதம் குறித்து பெற்றோருக்கு கிரமமாக தகவல்களை வழங்கும்: பாடசாலை வருடமொன்றில் ஆகக் குறைந்தது ஒரு தடவையாவது **பெற்றோருடனான கலந்துரையாடல்** (மாணவரின் பெற்றோருக்கும், வகுப்பாசிரியருக்கும் இடையேயான கலந்துரையாடல்) இடம்பெறும் (பார்க்கவும் மதிப்பீடு பக். 4). இதில் இயலுமானவரை **பெற்றோர் இருவரும்** பங்கேற்பது எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான நேரம் உங்களுடன் கதைத்துத் தீர்மானிக்கப்படும்.

உங்களுக்கு பாடசாலை பற்றி அல்லது பாடசாலையில் உங்கள் பிள்ளையின் வளர்ச்சிநிலை, நடந்துகொள்ளும் விதம் பற்றி குறைவாகவே அறிவிக்கப்படுகிறது என நீங்கள் எண்ணினால், இதுகுறித்து வகுப்பாசிரியரிடமோ அல்லது பாடசாலை அதிபரிடமோ கேட்டுக்கொள்ளுங்கள்.

ஆசிரியருடன் கதைத்து உங்கள் பிள்ளையின் வகுப்பு நேரத்தில் நீங்களும் **கற்பித்தலைப் பார்வையிடலாம்**.

பிள்ளையின் வளர்ச்சிநிலை மற்றும் அவதானித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் ஏற்கனவே தெரிந்தால், அவைபற்றி வகுப்பாசிரியருக்கு **அறிவியுங்கள்.**

பார்க்கவும் „வராமலிருத்தல்“ (பக். 4).

## மொழிபெயர்ப்பு
Übersetzung /

பெற்றோர் மாலையில் அல்லது பெற்றோருடனான கலந்துரையாடலில் கூறப்படுவதை நீங்கள் **விளங்கிக் கொள்வதென்பது** முக்கியமானதாகும். அத்துடன் நீங்கள் உங்கள் **விருப்பத்தைத் தெரியப்படுத்துவதும் கேள்வி களைக் கேட்பதுவும்** முக்கியமானவையாகும். இதற்கு உங்கள் மொழி அறிவு போதாதிருந்தால், நீங்கள் ஒரு வயதுவந்த மொழிபெயர்ப்பாளரை உங்களுக்காக மொழிபெயர்க்க கூட்டிவர முடியும். விசேடமாக பெற்றோர் கலந்துரையாடலுக்கு பாடசாலை ஒரு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடு செய்யமுடியும். பாடசாலையால் ஏற்பாடு செய்யப்படும் மொழிபெயர்ப்பாளர் நடுநிலையாளராகவும், இவ்வாறான செயற்பாடுகளுக்கு பயிற்சி பெற்றவராகவும், இரகசியங்களைக் காப்பவராகவும் இருப்பார்.

## முக்கிய முடிவுகள்
Wichtige Entscheide

உங்கள் பிள்ளையின் பாடசாலைக் காலத்தில் அனைத்து முக்கிய முடிவுகள் குறித்து (உதாரணமாக பாலர்பாடசாலையிலிருந்து ஆரம்பப்பாடசாலைக்கு மற்றும் ஆரம்பப்பாடசாலையிலிருந்து மத்தியதர நிலைlற்கு, அடுத்த வகுப்புக்கு வகுப்பேற்றுதல், விசேட வகுப்பிற்கு பிரித்தல்) உங்களுடனும், உங்கள் பிள்ளையுடனும் கதைக்கப்படும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர் ஊடாக தகவல்களை அறிவதற்கும், காதுகொடுத்து கேட்பதற்கும், ஆலோசனை பெறுவதற்கும் மற்றும் பிள்ளை சம்பந்தமான கோவையைப் பார்வையிடவும் உங்களுக்கு உரிமையுள்ளது. பாடசாலைத் **தொடர்வழித் தீர்மானம்** பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்படும். இறுதியான முடிவு உங்களுக்கு எழுத்துமூலமாகவும், காரணத்தைக் குறிப்பிட்டும் அனுப்பிவைக்க வேண்டும். உங்களால் இந்த முடிவை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால், இது குறித்த ஆட்சேபனையை பாடசாலைப் பரிசோதகரிடம் செய்துகொள்ளலாம். பார்க்கவும் „மதிப்பீடு“ (பக். 4).

## சேர்ந்து செயற்படல்
Mitwirkung

உங்கள் பிள்ளையின் ஆசிரியர்களுக்கு மற்றும் வகுப்பிற்கு அல்லது பாடசாலைக்கு சிறிய உதவிகளாக பயணங்களின் வழிநடத்தலின் போது, செயற்திட்டங்களின் போது, வேறு பிள்ளைகளின் பெற்றோருக்கு சிறிய மொழிபெயர்ப்புச் செய்தல் போன்றவைகளுக்கு ஒருவேளை நீங்கள் தயாராக இருந்து, சந்தர்ப்பங்களும் அமையுமாக இருந்தால், இது குறித்து வகுப்பாசிரியரிடம் தெரிவியுங்கள். இவ்வாறான உதவிகள் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே நல்ல உறவை வளர்ப்பதுடன் ஒரு நல்ல பாடசாலைச் சூழ்நிலையையும் உருவாக்குகின்றது.

அநேக பாலர்பாடசாலைகளில் மற்றும் பாடசாலைகளில் **பெற்றோர் ஆலோசனைக்குழு** ஒன்று அமைந்திருக்கும். இதில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒன்று தொடக்கம் இரண்டு பெற்றோர்கள் பிரதிநிதிகளாக இருப்பார்கள். இவர்கள் பாடசாலை வருட ஆரம்பத்தில் வகுப்புப் பெற்றோர்களால் தேர்வுசெய்யப்படுவர். ஒரு வகுப்பின் பெற்றோர் பிரதிநிதிகள் வகுப்பாசிரியருடன் நெருக்கமாகச் செயற்படுவர். இவர்கள் பெற்றோருக்கும் வகுப்பின் ஆசிரியர்களும் இடையிலான தொடர்புகளைப் பேணுவதோடு வளர்ப்பு மற்றும் பாடசாலை ஒழுங்கு பற்றிக் கதைத்துக் கொள்வார்கள். பெற்றோர் பிரதிநிதிகள் பிரச்சனைகளைத் தீர்க்க உதவுவதுடன், வகுப்பின் நிகழ்வுகள் மற்றும் செயற்திட்டங்களுக்கு உதவி வழங்குவதுடன் பாடசாலையின் பெற்றோர் ஆலோசனைக்குழுவில் வகுப்பின் பெற்றோர் சார்பாக அவர்களது தேவைகள் குறித்து பிரதிநிதித்துவம் செய்வர். பெற்றோர் ஆலோசனைக்குழு கதைக்க எடுக்கும் விடயம் முழுப் பாடசாலை (அல்லது ஆகக் குறைந்தது ஒரு நிலை) சம்பந்தமானதாக இருக்க வேண்டும்.
உங்கள் பிள்ளையின் பாலர்பாடசாலை அல்லது பாடசாலையின் மேலதிக பெற்றோர் செயற்பாடுகளை வகுப்பாசிரியரிடமோ அல்லது பாடசாலை அதிபரிடமோ கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## 5 கட்டாய பாடசாலையில் பிரச்சனையான சந்தர்ப்பங்கள்

சிலவேளை நீங்கள் உங்கள் பிள்ளை வகுப்பில் நன்றாக இல்லாததாகவும், கல்விச் செயற்பாடுகள் திடீரென குறைவதையும் உணரலாம். சிலவேளை உங்கள் பிள்ளைக்கு வேறு பிள்ளைகளுடன் பிரச்சனைகள் அல்லது பெற்றோராகிய உங்களுக்கு ஆசிரியரின் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கலாம்.

### பிரச்சனையான சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ளும் முறை
Vorgehen in schwierigen Situationen

பிரச்சனையான சந்தர்ப்பங்களில், உங்கள் பிள்ளை, ஆசிரியர் அல்லது வகுப்புடன் சம்பந்தப்படுபவர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்கவும்:

1. பெற்றோர், ஆசிரியர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளவேண்டும். நிலைமை குறித்து ஒருவரோடு ஒருவர் கதைத்து, தீர்விற்கான ஒரு வழியைத் தேடவேண்டும். வழமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு காணப்படும்.
2. பெற்றோரும், ஆசிரியரும் தீர்வொன்றுக்கு வரமுடியாவிட்டால், ஒரு பகுதி அல்லது இரு பகுதியினரும் தேவையென்று கருதும் பட்சத்தில், பெற்றோர், ஆசிரியர் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோருக்கு இடையில் ஒரு கலந்துரையாடல் இடம்பெறும்.
3. உங்களுக்குள் எழும் கேள்விகளுக்கு அல்லது எந்தவிதமான பிரச்சனைகளாயினும் திருப்தியான தீர்வு எட்டப்படாவிட்டால், நீங்கள் உங்கள் கோரலை பாடசாலைச் செயற்குழுவிற்குத் தெரிவிக்கலாம்.

இந்நடைமுறை பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டும். தேவையேற்படின் ஒரு மொழிபெயர்ப்பு ஒழுங்கு செய்யப்படும்.

### ஒழுக்கப் பிரச்சனைகளின் போதான நடவடிக்கை
Massnahmen bei Disziplinproblemen

அனைத்துப் பிள்ளைகளும் நலமாகவும், நன்றாக கற்றுக் கொள்ளக்கூடியதான ஒரு ஒழுங்குமுறைச் செயற்பாட்டை கட்டாய பாடசாலை மேற்கொள்ளும். மாணவர்கள் **பாடசாலையின் ஒன்றாகவாழும் ஒழுங்கு விதிகளை** (பாடசாலை ஒழுங்கு, வகுப்பொழுங்கு) கடைப்பிடிப்பதோடு, ஆசிரியர்கள், அதிபர் மற்றும் அங்கு கடமைபுரிவோரின் உத்தரவுகளின்படி நடக்க வேண்டும்.

ஒழுங்குவிதிகள் மீண்டும் மீண்டும் கடைப் பிடிக்கப்பட முடியாவிட்டால் அல்லது மிக மோசமாக மீறப்பட்டால் பெற்றோருக்கு அறிவிக்கப்படும். அத்துடன் பிரச்சனையான சந்தர்ப்பங்களில் நடந்துகொள்ளும் முறையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

ஒத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நேர்மறையான மாற்றங்களைக் கொண்டுவராவிடின் பாடசாலையூடாக வல்லுனரொருவர் சேர்த்துக் கொள்ளப்படலாம். மாணவரின் நடத்தை பாடசாலை இயக்கத்திற்கு பெரிதும் தடையாக இருப்பின், பாடசாலைச் செயற்குழு கண்டனத்தை அல்லது **பாடசாலையிலிருந்து இடைநிறுத்தத்தை** எழுத்துமூலம் வழங்கும். ஓர் ஒழுங்கான பாடசாலை இயங்குதலை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலைச் செயற்குழு மாணவர்களுக்கு பன்னிரெண்டு கிழமைகள் வரை பாடங்களுக்குத் தடை விதிக்கலாம். ஒரு (பகுதி) இடைநிறுத்தத்தின் போது நியாயமாகச் செயற்படுவதை பொறுப்பில் உள்ள வல்லுனரும், பெற்றோரும் ஒன்றிணைந்து ஒழுங்குசெய்வர்.

## 6 வளர்ப்பில் பிரச்சனையான நிலைமை

வளர்ப்பில் கேள்விகள் எழும்போதும் நீங்கள் வகுப்பாசிரியரை அணுகலாம். பிரச்சனையான நிலைமைகளில் ஏனைய பெற்றோர் எவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்பதை அவர்களுடன் கதைத்து அறிந்து கொள்ளுங்கள்.

### வல்லுனரின் ஊடான ஆலோசனை
Beratung durch Fachpersonen

உங்கள் பிள்ளையின் ஆசிரியர்களுடன் வேறு வல்லுனர்களையும் நீங்கள் அணுக முடியும்: உங்கள் பிரதேச கல்விக்கான ஆலோசனை நிலையம் உதவிகளை வழங்க முடியும்.

**கல்விக்கான ஆலோசனை நிலையம்** உங்களுக்காக உள்ளது:

- வளர்ப்பில் ஏற்படும் பிரச்சனைகள் ஒரு பெரிய அழுத்தமாக மாறினால், உங்களால் தனியாக அதைச் சமாளிக்க முடியாது (சொல்வழி கேட்காதநிலை, பிடிவாதம், பயம், முரட்டுத்தனம், சகோதரர்களுடன் சண்டை, தனது வயதுப் பிள்ளைகளுடன் பழகுவதில் பிரச்சனை, கடமையைச் செய்தலில் பிரச்சனை, இணையத்தளத்தை மிகஅதிகமாகப் பாவித்தல், மது அருந்துதல், போதைப்பொருள் பாவித்தல், பிரச்சனையான ஓய்வுநேரச் செயற்பாடுகள் போன்றவை. அல்லது ஒரு பிள்ளை உதாரணமாக எப்பொழுதும் கவலையுடன் இருத்தல் அல்லது உணவு உண்ண விருப்பமில்லாதிருத்தல்).
- குடும்பம் ஒரு பிரச்சனையான நிலைமையில் இருந்தால் (பிரிவு, விவாகரத்து, வேறு குடும்பச்சுமை போன்றவை)
- ஒரு பிள்ளைக்கு பாடசாலையில் பிரச்சனைகள் இருந்தால் (கற்றல், செயற்திறன் மற்றும் நடத்தைப் பிரச்சனைகள்) மற்றும் உதவி வழங்குவதற்கு சரியாகத் தெளிவபடுத்த வேண்டியிருந்தால் (பெற்றோர் மற்றும் பாடசாலை ஒன்றிணைந்து விண்ணப்பித்தல்)
- ஒரு வகுப்பில் அல்லது பாடசாலையில் பிரச்சனைகள் எழுமாயின் (உ-ம். வன்முறை, இனப்பாகுபாடு)

மேலதிக தகவல்களை பல மொழிகளில் மற்றும் உங்களுக்கு அண்மையாகவுள்ள ஆலோசனை நிலையங்களை நீங்கள் கண்டுகொள்ள:
www.erz.be.ch/erziehungsberatung

ஒருசில கிராமசபைகள் **பாடசாலை சமூகப்பணியாளரை** கொண்டுள்ளனர். பிரச்சனைகள் வரும்போது நீங்கள் இந்த வல்லுனர்களையும் அணுகலாம். இவ்வல்லுனர்கள் உங்கள் தேவைக்கேற்றவாறு ஆலோசனை வழங்குவதுடன் நீங்கள் விரும்பும் பட்சத்தில் அடுத்து அடியெடுத்து வைக்கத் திட்டமிட உதவிசெய்வார்கள்.

கல்விக்கான ஆலோசனையில் ஒருவருடன் அல்லது பாடசாலை சமூகப்பணியாளருடன் கலந்துரையாடுவதற்கு தேவைப்படின் **மொழிபெயர்ப்பை** ஒழுங்கு செய்யமுடியும்.

அனைத்து வல்லனர்களும் தொழில்ரீதியாக இரகசியம் காப்பதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

## 7 பாடசாலை வெற்றிக்கு பெற்றோரின் பங்களிப்பு

உங்கள் பிள்ளை நன்றாக வளர்ச்சியடைவதற்கான அடிக்கல் அவர்களின் வாழ்வில் முதல் வருடங்களிலேயே இடப்படுகின்றது. நாளாந்த வளர்ப்புமுறை தொடர்பான குறிப்புகள் பல மொழிகளில் வெளியிடப்பட்ட „பாடசாலைக்குத் தயாராகுதல்" (Fit für die Schule): என்னும் பிரசுரத்தில் நீங்கள் கண்டு கொள்ளலாம். www.erz.be.ch/erziehungsberatung

பெற்றோராக நீங்கள் கணிசமான அளவு உங்கள் பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யமுடியும்:

### ஆர்வம் காட்டுதல்

- ஆசிரியர்களுடன் தொடர்பைப் பேணுவதோடு இயலுமானவரை பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் பங்குகொள்ளுங்கள். இதனால் பாடசாலை முக்கியமானது என்பதை உங்கள் பிள்ளைக்குக் காண்பிக்கின்றீர்கள். ஆசிரியர்களுடன் கருத்துப் பரிமாற்றம் மற்றும் சேர்ந்து வேலைசெய்வதால் உங்கள் பிள்ளை முடியுமான அளவு நன்றாக ஊக்குவிக்கப்பட முடியும்.
- பாடசாலையில் எதை அனுபவித்தார்கள் மற்றும் படித்தார்கள் என்பதைக் கூற உங்கள் பிள்ளையை அனுமதியுங்கள்.

### உற்சாகப்படுத்தல் மற்றும் ஆதரவளித்தல்

- பாடசாலைக்கு வரும்போது உங்கள் பிள்ளை அமைதியாகவும், வயிற்றில் நல்ல காலை உணவுடனும், இடைவேளையில் உண்பதற்கான உணவு அவர்களின் பைக்குள்ளும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையை பாடசாலைக்கு (சிற்றூர்தியில்) கூட்டி வராதீர்கள். பாடசாலைக்கான வழியை அவர்கள் தனியாக செல்லும்வரை அல்லது மிதிவண்டியில் சென்று திரும்புவதற்குப் பழக்குங்கள்.
- உங்கள் பிள்ளை தனது வீட்டுப் பாடங்களை செய்து முடித்தபின் அடுத்தநாள் பாடசாலைக்கு தனது புத்தகப்பையை தயாராக வைப்பதைக் கவனித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் கற்றுக்கொள்ளும் திறமையில் நம்பிக்கை வையுங்கள். இயலுமானவரை அநேகமானவற்றைத் தனியாகச் செய்வதற்கு விடுங்கள்.
- உங்கள் பிள்ளையின் கற்கும் முயற்சியையும், கடினமான வேளைகளில் உறுதியுடன் இருப்பதையும் புகழுங்கள்.
- உங்கள் பிள்ளையின் பிழைகளை விமர்சிக்காதீர்கள், மாறாக அவர்களுடன் சேர்ந்து அதிலிருந்து எதைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதைச் சிந்தியுங்கள்.

### மொழி மற்றும் சொந்த அனுபவங்களைப்பெற ஆதரவளித்தல்

- உங்கள் பிள்ளையுடன் சிறுவயது தொடக்கம் அதிகமாகக் கதையுங்கள்: நீங்கள் தற்போது என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள் என்பதைக் கூறுவதோடு, உலகைப் பற்றியும் எமது சூழலில் உள்ளவை பற்றியும் விளக்குங்கள். அவர்கள் கூறுவதை கவனித்துக்கேட்பதுடன், அவர்களது கேள்விகளுக்கும் பதிலளியுங்கள். கதைளை கூறுவதோடு அவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்
- உங்கள் பிள்ளையுடன் ஒன்றுசேர்ந்து செயற்படுங்கள்: அவர்களுடன் சேர்ந்து உ-ம். மிருகக்காட்சிசாலை செல்லுதல், கப்பலில் போதல், கண்காட்சி மற்றும் இயற்கையை இரசிக்கச் செல்லல் போன்றவை. இதன்மூலம் உங்கள் பிள்ளை உலகை அனைத்து புலன்களினாலும் அனுபவித்துக்கொள்ள முடியும் என்பதோடு அவற்றின் தொடர்புகளையும் விளங்கிக்கொள்ள முடியும்.
- உங்கள் பிள்ளையுடன் கிரமமாக வாசிகசாலைக்குச் செல்வதோடு, அவர்கள் வாசிப்பதையும் ஊக்கப்படுத்துங்கள்.

பல மொழிகளுடன் வளரும் பிள்ளைகள்:

- உங்களுக்கு நன்கு தெரிந்த மொழியில் உங்கள் பிள்ளையுடன் கதையுங்கள். உங்கள் பிள்ளை ஜெர்மன்மொழியில் மறுமொழி கூறினாலும் நீங்கள் உங்கள் மொழியிலேயே கதையுங்கள்.
- உங்கள் பிள்ளை சிறுவயது முதற்கொண்டே ஜெர்மன்மொழி கற்பதில் அக்கறை கொள்ளுங்கள். நீங்களும் உள்ளூர் மொழியில் ஆர்வத்தைக் காட்டுவதோடு அதைக் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள்தான் உங்கள் பிள்ளைக்கு முன்மாதிரியானவர்கள்.
- உங்கள் பிள்ளையை தாய்மொழி மற்றும் கலாச்சாரத்தைக் கற்பற்கு அனுப்பிவையுங்கள் (HSK): முதல்மொழியை அல்லது முதல்மொழிகளை (தாய்மொழி/தந்தைமொழி) ஊக்குவிப்பது நல்ல மொழி வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

பார்க்க „பல மொழிகளுடன் வளர்தல்": www.erz.be.ch/hsk

### புதிய ஊடகங்களுடன் ஒத்துப்போகும் வரைமுறைகள்

புதிய ஊடகங்களைப் பாவித்தல் (கணனி/இணையத்தளம், கைத்தொலைபேசி, மின்னஞ்சல், அரட்டை, விளையாட்டுக்கள், „பேஸ்புக்", „யூருயூப்" போன்றவை) அதிக சாத்தியங்களை வழங்குவதோடு பிள்ளைகள் மற்றும் இளையோர் நாளந்தம் பாவிப்பது வழக்கமாகி விட்டது. ஆனால் இவ்வாறு ஊடகங்களைத் தீவிரமாகப் பயன்படுத்துவது அல்லது பிரச்சனையான நோக்கங்கள் துஸ்ப்பிரயோகத்துக்கு இட்டுச் செல்லும் என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன (இணைய நிகழ்கலைக்கு அடிமையாதல், மின்வெளியில் கும்பலாகக் கூடித் தாக்குதல், வன்முறையைத் தூண்டுதல், காமப்படங்கள் போன்றவை). இப்புதிய ஊடகங்களுடன் பொறுப்புடன் நடப்பதற்கு பிள்ளைகளும், இளையோரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

- தொலைக்காட்சி மற்றும் கணனியை பிள்ளைகளின் அறைகளில் வைக்காதீர்கள், மாறாக முழுக் குடும்பத்திற்குமான அறையில் வையுங்கள்.
- உங்கள் பிள்ளையின் இணையத்தளச் செயற்பாட்டில் நீங்கள் அக்கறை கொள்வதோடு பிள்ளை என்ன விளையாட்டு விளையாடியது, எத் தொடர்பாடல்மன்றம் மற்றும் இணையத்தளத்தைப் பயன்படுத்தியது என்பதைக் காட்டுமாறு கேளுங்கள்.
- உங்கள் பிள்ளையின் ஊடகப் பாவிப்புக்கு தெளிவான விதிகளையும், அத்துடன் அதைக் கடைப்பிடிக்காவிடில் என்ன நடைபெறும் என்பதையும் சேர்ந்து கதைத்துத் தீர்மானியுங்கள்: ஒரு நாளுக்கு / ஒரு கிழமைக்கு எவ்வளவு நேரம், பொருத்தமான நிகழ்ச்சிகள், விளையாட்டுக்கள் மற்றும் இணையத்தளப் பக்கங்கள், இணையத்தளத்தில் நடந்து கொள்ளும் முறைகள்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் கணனி விளையாட்டுக்களில் வயதெல்லையைக் கவனியுங்கள்.
- உங்கள் பிள்ளை குடும்பத்துடன் அல்லது சமவயதினருடன் உற்சாகமாக ஓய்வுநேரத்தைக் கழிக்கவும், கிரமமாக வெளியில் நடமாடுவதற்கும் உதவி செய்யுங்கள்.

புதிய ஊடகங்களுடன் பழகும் விதம் குறித்து பல மொழிகளில் குறிப்புகள்:

www.migesplus.ch > Kind und Gesundheit
www.sucht-info.ch > Elternbrief 8
www.cybersmart.ch

## 8 விளக்க அட்டவணை

**வராமலிருத்தல்**
Absenzen
வராமலிருத்தல் என்பது பாடத்திற்கு சமூகமளிக்காதிருத்தல்

**தொழிலுக்கான ஆலோசனை**
Berufsberatung
தொழிலுக்கான ஆலோசனைகளை வழங்கி உதவிசெய்யும் வல்லுனர்கள் இளையோருக்கும், வளர்ந்தோருக்கும் அவர்களுக்கேற்ற தொழிற்பயிற்சிகளை அல்லது மேலதிக கற்கை நெறிகளை தெரிவுசெய்ய தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி உதவிசெய்வார்கள். இவர்கள் பிரதேச தொழிற் தகவல் நிலையத்தில் பணியாற்றுவார்கள் (BIZ).

**விடுமுறை பெறுதல்**
Dispensationen
விடுமுறை பெறுதல் என்றால் முற்கூட்டியே திட்டமிட்டு, கிரமமாகப் பாடங்களுக்கு சமூகமளிக்காமல் இருக்க அல்லது நீண்ட காலத்துக்கு வராமலிருக்க அனுமதிகோரும் விண்ணப்பபம்.

**கல்வி மற்றும் வளர்ப்புக்கான ஆலோசனை**
Erziehungsberatung (EB)
கல்வி மற்றும் வளர்ப்புக்கான ஆலோசனை வழங்கும் வல்லுனர்கள் குடும்பம், பிள்ளைகள் மற்றும் இளையோருக்கு சிரமமான சூழ்நிலைகளில் ஆலோசனை வழங்குவதோடு, கற்பதில் இருக்கும் பிரச்சனைகளின் காரணங்கள் குறித்து தெளிவுபடுத்துவர். இவர்கள் பிரதேச கல்வி மற்றும் வளர்ப்புக்கான ஆலோசனை நிலையத்தில் பணிபுரிவார்கள்.

**கல்வித்திணைக்களம்**
Erziehungsdirektion
கல்வித்திணைக்களம் என்பது மாநிலத்தின் கல்விக்குரிய அதிகாரப்பிரிவு. இது கிராமசபைகளில் உள்ள கட்டாய பாடசாலையின் அடிப்படை விதிகளை தீர்மானம் செய்வதுடன், பாடத்திட்டத்தையும் வெளியிடுகின்றது.

**வல்லுனர்கள்**
Fachperson
வல்லுனர்கள் விசேடமாக ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டுக்காகத் தேர்ச்சிபெற்றவர்கள். ஆசிரியர்கள் கற்பிப்பதிலும், கற்பதிலும் வல்லுனர்களாக உள்ளனர். மேலதிக வல்லுனர்கள் ஆசிரியர்களுக்கும் மற்றும் பெற்றோருக்கும் அவர்களின் கற்கும் மற்றும் வளர்ப்பு செயற்பாடுகளில் உதவி புரிகின்றனர். உதாரணமாக கல்வி மற்றும் வளர்ப்பிற்கான ஆலோசனையின் வல்லுனர்கள், பாடசாலை சமூகப்பணியாளர் மற்றும் தொழிற்கல்வி ஆலோசனையாளர்.

**கிராமசபை**
Gemeinde
கிராமசபை கட்டாய பாடசாலையின் ஒழுங்குகளுக்குப் பொறுப்பு வகிக்கின்றது. அது பாடசாலையின் கட்டமைப்பை வழங்குகின்றது: பாடசாலைக் கட்டிடம், தளபாடங்கள் மற்றும் பாடங்களுக்கான உபகரணங்கள். கிராமசபையின் இணையத்தளத்தில் அல்லது கிராமசபை நிர்வாகப்பணிமனையின் வரவேற்பிடத்தில் அவ்விடத்தின் மேலதிக வசதிகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வகுப்பாசிரியர்**
Klassenlehrperson
வகுப்பின் கல்வி உளவியல், வகுப்பொழுங்கை வழிநடத்தல் ஆகிய பொறுப்புகள் வகுப்பாசிரியரைச் சேர்ந்தது. உங்கள் பிள்ளையின் பாலர்பாடசாலை மற்றும் பாடசாலை குறித்த விடயங்களுக்கு நீங்கள் இவரையே முதலில் தொடர்புகொள்ள வேண்டும்.

**பாடசாலை அதிபர்**
Schulleitung
பாடசாலையின் கல்வி உளவியல் மற்றும் கட்டாய பாடசாலையை வழிநடத்தல் ஆகியவற்றிற்கு அதிபர் பொறுப்பு வகிப்பார். இவரே ஒவ்வொரு வகுப்புகளுக்கும் பிள்ளைகளைப் பிரிப்பதற்கும் மற்றும் பாடசாலைத் தொடர்வழித் தீர்மானத்திற்கும் பொறுப்பு வகிப்பார்.

**பாடசாலைச் செயற்குழு**
Schulkommission
பாடசாலைச் செயற்குழு, பிள்ளைகள் மாநிலச் சட்டவிதிகளின்படியும், கிராம நிர்வாகத்தால் கொடுக்கப்பட்ட ஒழுங்குகளின்படியும் கட்டாய பாடசாலைக்கு செல்கின்றார்களா என்பதைக் கவனித்துக் கொள்வார்கள். இதைவிட இவர்கள் உங்கள் கட்டாய பாடசாலை யுக்தியுடன் திட்டமிடுவதற்கு பொறுப்பானவர்கள்.

**பாடசாலை பரிசோதகர்கள்**
Schulinspektorat
பாடசாலைப் பரிசோதகர்கள் மாநிலம் சார்பாக கட்டாய பாடசாலையை கண்காணித்துக் கொள்வார்கள்.

**பாடசாலையின் சமூகப்பணி**
Schulsozialarbeit
பாடசாலையின் சமூகப்பணியாளர் அல்லது பாடசாலையின் சமரசம் செய்பவர் பிள்ளைகள் மற்றும் இளையோர்களுக்கு சமூக அல்லது தனிப்பட்ட பிரச்சனைகளில் உதவியும் ஆலோசனையும் வழங்குவார்கள். இவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கும் ஆலோசனை வழங்குவார்கள்.


### Impressum

Die Volksschule im Kanton Bern
Elterninformationen deutschsprachiger Kantonsteil
Sprache: Tamil (Ausgabe 2013)

Herausgeber
Erziehungsdirektion des Kantons Bern
Amt für Kindergarten, Volksschule und Beratung
www.erz.be.ch/volksschule , akvb@erz.be.ch

Keine Printausgabe.
Download: www.erz.be.ch/elterninfo

Quellennachweis Bilder


Die Bilder sind urheberrechtlich geschützt.


Alle Bilder ausser Seite 1:
Christoph Heilig | www.foto-heilig.ch
Seite 1: zvg